ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ)அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு. ஆர். பாலாஜி

ந.க.13800/2020/அ5 நாள்: 28.11.2020.

பொருள்: நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி IV - இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் 2018-19 மற்றும் 2019-2020 ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்டு ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிநியமனம் வழங்கப்பட்டது - பணியில் சேர்ந்த இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.2512/PSD-D2/2020 நாள்: 26.05.2020 மற்றும் 22.09.2020.
2. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க. 13800 / 2020 / அ5, நாள் : 12.10.2020
3. சத்தியமங்கலம், ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரின் ந.க.எண்.140/2020/ஆ, நாள: 19.11.2020.

----------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக தொகுதி IV-க்குட்பட்ட 2018-19 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வை 01-ல் காணும் கடிதத்தின்படி ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டடு சத்தியமங்கலம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு. எம். ரகுபதி என்பவரது பணியினை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதிகளின் விதி 23(a)(i)-ன்கீழ் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழ்க்காணும் பட்டியலில் அவருக்கெதிரே குறிப்பிடப்பட்ட தேதியில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் (திருவாளர்) | பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | எம். ரகுபதி | இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>தனி வட்டாட்சியர்,<br>(ஆதி திராவிடர் நலம்)<br>அலுவலகம்,<br>சத்தியமங்கலம். | 16.10.2020 முற்பகல் | 16.10.2020 முற்பகல் |

2). மேற்காணும் பணிவரன்முறை ஆணை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டது.

**"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination -IV for the year 2018-19 and 2019-2020".**

3). மேற்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளரின் பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான விபரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சத்தியமங்கலம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- ஆர். பாலாஜி,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)(பொ),
ஈரோடு.

//உண்மை நகல்//ஆணைப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்:
திரு. எம். ரகுபதி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
தனி வட்டாட்சியர்,
(ஆதி திராவிடர் நலம்) அலுவலகம்,
சத்தியமங்கலம். - உரிய வழிமுறையாக.

நகல் : முதன்மைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை - 5
- அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை
- அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : தனி வட்டாட்சியர், (ஆதி திராவிடர் நலம்), சத்தியமங்கலம்.

நகல் : அ5, முக்கிய ஆணை தொகுப்பிற்கு, உபரி - 2.